கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421,
94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 157 • 12-12-2025 • வெள்ளி • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி

Volume 01 • Issue: 157 • 12-12-2025 • Friday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy

## ‘உரிமை கோரப்படாத பணத்தை மீட்டெடுங்கள்’ நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு

புதுடெல்லி: டிச.12–

உங்கள் பணம், உங்கள் உரிமை இயக்கத்தில் பங்கேற்று உரிமை கோரப்படாத பணத்தை மீட்டுக் கொள்ள வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், பங்குச் சந்தை, பரஸ்பர நிதி நிறுவனங்களில், பல ஆயிரம் கோடி ரூபாய் பல்வேறு காரணங்களால் பொதுமக்களால் நீண்ட காலமாக உரிமை கோரப்படாமல் உள்ளது. இந்தத் தொகையை உரியவர்களிடம் ஒப்படைப்பதற்காக ‘உங்கள் பணம், உங்கள் உரிமை இயக்கம்‘ கடந்த அக்டோபரில் தொடங்கப்பட்டது.

இதுகுறித்து லிங்க்டு இன் சமூக வலைதளத்தில் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: ”நாடு முழுவதும் உள்ள வங்கிகளில் ரூ.78 ஆயிரம் கோடியும் காப்பீட்டு நிறுவனங்களில் ரூ.14 ஆயிரம் கோடியும், பரஸ்பர நிதி நிறுவனங்களில் ரூ.3 ஆயிரம் கோடியும் பங்கு ஈவுத் தொகையாக ரூ.9,000 கோடியும் உரிமை கோரப்படாமல் உள்ளன.

கடினமாக உழைத்து சம்பாதித்து சேமித்த இந்த தொகையை ஒவ்வொரு குடிமகனும் மீண்டும் பெற முடியும் என்பதை உறுதிப்படுத்தவே ‘உங்கள் பணம், உங்கள் உரிமை இயக்கம்‘ தொடங்கப்பட்டுள்ளது. இந்த செயல் முறையை எளிமையாகவும் வெளிப்படையாகவும் மாற்ற இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய காப்பீட்டு ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ), இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (செபி) மற்றும் மத்திய பெரு நிறுவன விவகார அமைச்சகத்தால் தனித்தனி இணையதளங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், உரிமை கோராத தொகையை மீட்பதற்காக, நாடு முழுவதும் தொலைதூர கிராமங்கள் உட்பட 477 மாவட்டங்களில் ஏற்கெனவே முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் சுமார் ரூ.2 ஆயிரம் கோடி உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் தங்கள் பெயரிலோ அல்லது தங்கள் குடும்பத்தினர் பெயரிலோ உரிமை கோரப்படாத தொகை ஏதேனும் இருக்கிறதா என சரிபார்த்து, உரிமை கோரப்படாத முதலீடு இருந்தால் அதை மீட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி திரவுபதி முர்மு வரும் 17ம் தேதி வேலூர் வருகை

வேலூர்: டிச.12–

இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு வேலூர் மாவட்டத்திற்கு வரும் 17ம் தேதி வருகை தர உள்ளார்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், ‘வேலூருக்கு வரும் 17ம் தேதி காலை 11 மணியளவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு வருகை தர உள்ளார். அவருடன் தமிழக கவர்னர் ரவி, மத்திய அமைச்சர் முருகன் ஆகியோர் வருகின்றனர். பொற்கோயில் வளாகத்தில் உள்ள வெள்ளியால் அமைக்கப்பட்ட விநாயகர், சொர்ணலட்சுமி, பெருமாள் ஆகிய கோயில்களில் ஜனாதிபதி சுவாமி தரிசனம் செய்கிறார்.

பின்னர், சக்தி அம்மாவிடம் ஆசி பெறுகிறார். கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தியான மண்டபத்தை திறந்து வைத்து மரங்களை நட்டு வைக்கிறார். பின்னர் 12:30 மணிக்கு வேலூரில் இருந்து திருப்பதிக்கு செல்கிறார்.’ என்றனர்.

## நீதிபதியை மிரட்டும் 120 எம்பிக்களை தகுதி நீக்கம் செய்க: ஜனாதிபதி, பிரதமர், தலைமை நீதிபதிக்கு மருதமலையார் பரபரப்பு கடிதம்!



டிசம்பர் 12:

திருப்பரங்குன்றம் கோவில் விவகாரத்தில் தீர்ப்பு வழங்கிய நீதிபதியை பதவி நீக்கம் செய்யக் கோரி கையெழுத்திட்ட, திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணியைச் சேர்ந்த 120 எம்பிக்களையும் உடனடியாக தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, இந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவர் மருதமலையார் (எ) மருதமலை ஏகேஜி சித்தார்த் அபிமன்யு, நாட்டின் மிக உயர்ந்த பதவிகளில் உள்ளவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

திருப்பரங்குன்றம் கோவில் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பை எதிர்த்து, சம்பந்தப்பட்ட நீதிபதியை பதவி நீக்கம் (Impeachment) செய்ய வேண்டும் என திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

கடிதம் அனுப்பப்பட்டவர்கள்: இந்தச் செயல் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிப்பதாகக் கூறி, (டிசம்பர் 11) கீழ்க்கண்ட முக்கியத் தலைவர்களுக்கு மருதமலையார் தனித் தனியாகக் கடிதம் அனுப்பியுள்ளார்

இந்திய குடியரசுத் தலைவர் இந்திய துணை குடியரசுத் தலைவர் பாரதப் பிரதமர் மத்திய உள்துறை அமைச்சர் மக்களவை சபாநாயகர் உச்சநீதிமன்ற நீதிபதி , ஆகியோருக்கு இந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவர் மருதமலையார் (எ) மருதமலை ஏகேஜி சித்தார்த் அபிமன்யு எழுதியுள்ள அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது

“ நீதித்துறை என்பது அரசியலமைப்பின் தனித்துவமான மற்றும் சுதந்திரமான அமைப்பாகும். ஒரு வழக்கில் நீதிபதி வழங்கிய தீர்ப்புக்காக, அவரை அச்சுறுத்தும் வகையில் 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அவரைப் பதவி நீக்கம் செய்யக் கோருவது ஜனநாயகத்திற்கு விரோதமானது. இது நீதித்துறையின் சுதந்திரத்தில் அரசியல்வாதிகள் தலையிடும் மிக மோசமான முன்னுதாரணமாகும்.

நீதிபதியைச் சுதந்திரமாகச் செயல்பட விடாமல் தடுக்கும் வகையிலும், நீதித்துறையை மிரட்டும் வகையிலும் செயல்பட்ட இந்த 120 எம்பிக்களும் தங்களது பதவிப் பிரமாணத்தை மீறியுள்ளனர். எனவே, நீதித்துறையின் மாண்பைக் காக்க, அந்த நீதிபதியை எதிர்த்த 120 இந்தியா கூட்டணி எம்பிக்களையும் உடனடியாக தகுதி நீக்கம் செய்ய வேண்டும்,” என்று அந்தக் கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் மிக உயர்ந்த அதிகாரம் கொண்ட 6 முக்கியத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதம், டெல்லி அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## “இத்தனை லட்சம் பேருக்கு கிடைக்கப்போகிறதா..? 2ம் கட்ட மகளிர் உரிமைத்தொகை திட்டம் இன்று தொடக்கம்



சென்னை, டிச.12–

தமிழகத்தில் 2021ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. தேர்தலுக்கு முன்பாக, திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், தேர்தலில் வெற்றி பெற்று திமுக ஆட்சி அமைத்த நிலையில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்ட போதும், மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்படாமல் இருந்து வந்தது. இந்த நேரத்தில், அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், திமுக தேர்தல் அறிக்கையில் அறிவித்த மகளிர் உரிமைத்தொகை திட்டம் எப்போது வழங்கப்படும் என்று கேள்வி எழுப்பத் தொடங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, கடந்த 2023ம் ஆண்டு மார்ச் 27ந் தேதி சட்டசபையில் பேசிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் தொடங்கப்படுவதாக அறிவித்தார். அதன்படி, 1 கோடியே 13 லட்சத்து 75 ஆயிரத்து 492 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 15ந் தேதி அவர்களின் வங்கிக் கணக்குகளிலேயே நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், மேலும் பல பெண்கள், தங்களையும் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் இணைக்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினும் 2ம் கட்டமாக மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று உறுதியளித்தார். அதன்படி, விண்ணப்பிக்கும் பணிகள் தொடங்கின. மொத்தம் 28 லட்சம் பெண்கள், மகளிர் உரிமைத்தொகைக்காக விண்ணப்பித்தனர். அவர்களில் இருந்து தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன்படி சுமார் 15 லட்சம் பேர் 2ம் கட்ட மகளிர் உரிமைத்தொகைக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை வழங்கும் தொடக்க விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறுகிறது. விழாவுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார். இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவகியும், பத்மபூஷன் விருது பெற்றவருமான கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், 2022ம் ஆண்டு சீனாவின் காங்சோவில் நடைபெற்ற மாற்றுதிறனாளர் ஆசிய விளையாட்டு பூப்பந்து போட்டியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியவருமான துளசிமதி முருகேசன் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றனர்.”,

## திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபமேற்ற வலியுறுத்தி டிச.13ல் உண்ணாவிரதம்: ஐகோர்ட் அனுமதி

மதுரை: டிச.12–

மதுரை திருப்பரங்குன்றம் பகுதியைச் சேர்ந்த பிரபு, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: திருப்பரங்குன்றம் முருகன் கோயில் 2000 ஆண்டுகள் பழமையானது. 1926 ல் உரிமையியல் பிரச்சினை எழும் வரை தீபத்தூணில் தான் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டுள்ளது. அதன்படியே இந்த ஆண்டு தீபத்தூணில் தீபம் ஏற்ற தனி நீதிபதி உத்தரவிட்டார். இந்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை.

உயர் நீதிமன்ற உத்தரவுபடி திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணிலும் கார்த்திகை தீபம் ஏற்ற வலியுறுத்தி திருப்பரங்குன்றத்தில் அமைதியான முறையில் உண்ணாவிரத போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டு காவல்துறையிடம் அனுமதி கோரப்பட்டது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் எனக் கூறி அனுமதி வழங்க காவல்துறை மறுத்துவிட்டது.

எனவே டிச.13ல் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திருப்பரங்குன்றம் மயில் மண்டபம் அருகே உண்ணாவிரதப் போராட்டம் நடத்த அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி எஸ்.ஸ்ரீமதி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில், மனுதாரர் கோரும் இடத்திற்கு பதிலாக மாற்று இடத்தில் உண்ணாவிரதம் இருக்க அனுமதி வழங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்க நீதிபதி மறுத்துவிட்டார்.

பின்னர் நீதிபதி, மனுதாரர் கோரும் இடத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தலாம். 50 பேர் மட்டுமே பங்கேற்க வேண்டும். அதை விட அதிகமான ஆட்கள் பங்கேற்கக்கூடாது. உண்ணாவிரதப் போராட்டத்தில் தனி நபர்களையோ, அரசியல் கட்சியினரையோ தாக்கும் வகையில் பேசக்கூடாது என உத்தரவிட்டார்.

## 13 ஆண்டு சிறை தண்டனையை எதிர்த்து பி.ஆர்.பாண்டியன் மேல்முறையீடு!

சென்னை: டிச.12–

ஓஎன்ஜிசி வழக்கில் விதிக்கப்பட்ட 13 ஆண்டுகள் சிறை தண்டனையை எதிர்த்து விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ஆர்.பாண்டியன், செல்வராஜ் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியைச் சேர்ந்த பி.ஆர்.பாண்டியன் தமிழக அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு குழுத் தலைவராகவும், காவிரி விவசாயிகள் சங்க பொதுச் செயலாளராகவும் உள்ளார். 2015ம் ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் ஓஎன்ஜிசி நிறுவனத்துக்கு எதிராக நடந்த போராட்டத்தில் பொதுச் சொத்துகளை சேதப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் பி.ஆர்.பாண்டியன் மற்றும் முன்னாள் பஞ்சாயத்து தலைவரான செல்வராஜ் ஆகியோருக்கு தலா 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

அதையடுத்து பி.ஆர்.பாண்டியன், செல்வராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் இந்த வழக்கில் நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்தும், தங்களுக்கு ஜாமீன் வழங்கக் கோரியும் பி.ஆர். பாண்டியன்,செல்வராஜ் ஆகியோர் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டு மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

## புதுச்சேரி காமராஜ்நகர் தொகுதியில் ரூ.58 லட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்க அமைச்சர் ஜான்குமார் பூமி பூஜை.



புதுச்சேரி காமராஜ் நகர் தொகுதிக்குட்பட்ட விநாயகர் கோயில் தெரு மற்றும் திருவேங்கடம் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைப்பதற்காக, அமைச்சர் ஜான்குமார் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 45 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், காமராஜ் நகர் தொகுதிக்குட்பட்ட இரண்டாவது குறுக்கு தெரு விரிவாக்கத்தில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைப்பதற்காக, அமைச்சர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 13 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்தம் ரூ.58 லட்சம் மதிப்பிலான இப்பணிகளுக்கான பூமி பூஜையை அமைச்சர் ஜான்குமார் செய்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ், அரசு அதிகாரி டாக்டர் பால்ராஜ், செயற்பொறியாளர் மலை வாசன், உதவி பொறியாளர் சரவணன், இளநிலை பொறியாளர் ஜெய்சங்கர், காமராஜ் நகர் தொகுதி தலைவர் விஜயராஜ், தொகுதி செயலாளர் சரவணன், கட்சி நிர்வாகிகள், குடியிருப்பு சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து, போர்க்கால அடிப்படையில் மக்கள் பணி சிறப்பாக செய்து வரும் அமைச்சர் ஜான்குமாருக்கு, தொகுதி தலைவர் விஜயராஜ் தலைமையில் பொதுமக்கள் சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்கள்.

## அரியலூர் _ கல்வி நிலையங்கள் குடியிருப்புகள் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் சுண்ணாம்பு கன்கர் சுரங்கம் அமைக்க அனுமதி வழங்கக் கூடாது என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தினர்




அரியலூர், டிச. 12–

அரியலூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் ராம்கோ சிமெண்ட் ஆலை நிறுவனத்திற்கு சொந்தமாக கயர்லாபாத்தில் உள்ள 35 ஏக்கர் பரப்பளவில் சுண்ணாம்பு கன்கர் சுரங்கம் அமைப்பதற்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைய உள்ள பகுதியை சுற்றியுள்ள பல்வேறு கிராம மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்

கூட்டத்தில் சமூக ஆர்வலர் இளவரசன் பேசும்போது சுண்ணாம்பு கன்கர் சுரங்கம் அமைய உள்ள இடத்திற்கு அருகில் கல்வி நிலை யங்கள் குடியிருப்புகள் வழிபாட்டு தலங்கள் உள்ளது மேலும் இவ்விடத்தில் சுரங்கம் அமைக்க அனுமதி அளித்தால் அமைதியான சூழல் பாதிக்கப்படும் சுண்ணாம்பு கன்கர் சுரங்கம் அமைய உள்ளது குறித்து தனியார் சிமெண்ட் ஆலை கொடுத்த ஆய்வறிக்கையில் சுகாதாரம், நிலத்தடி நீர்மட்டம் குறித்து எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்க எந்தமாதிரி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆய்வு அறிக்கை தெரிவிக்கவில்லை. எனவே இந்த சிமெண்ட்டாலை தாக்கல் செய்த ஆய்வறிக்கையில் பல்வேறு தவறுகள் உள்ளன. எனவே சுண்ணாம்பு கன்கர் சுரங்கம் அமைக்க அனுமதி அளிக்கக் கூடாது என வலியுறுத்தினார்

பாலசிங்கம் என்ற சமூக ஆர்வலர் பேசும்போது அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு சிமெண்டாலைகள் இருந்தபோதிலும் அதிலிருந்து கிடைக்கப்பெறும் கனிமவள நிதி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் அரியலூர் மாவட்ட மக்களுக்கு கனிமவள நிதியால் உரிய பலன் கிடைப்பதில்லை. எனவே சிமெண்டாலை மூலம் கிடைக்கக்கூடிய கனிமவள நிதியை அரியலூர் மாவட்ட மக்கள் குறிப்பாக சிமெண்ட்டாலை சுண்ணாம்புக்கல் சுரங்கம் அருகில் உள்ள கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளுக்காக செலவிட வேண்டும். சுரங்கம் அமையுள்ள இடங்களில் பசுமை காடுகளை உருவாக்க வேண்டும் என்ற அரசின் விதிமுறைகள் எந்த சிமெண்ட் ஆலையும் பின்பற்ற வில்லை எனவும் குற்றம் காட்டினார்

# 2026ஆம் ஆண்டு "கபீர் புரஸ்கார்" விருதுக்கு தகுதியானவர்கள் விண்ணபிக்கலாம்

## திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தகவல்

திருச்சி. டிச. 12–

2026 ஆம் ஆண்டிற்கான "கபீர் புரஸ்கார் விருது" ஒவ்வொரு ஆண்டும் தமிழக முதலமைச்சரால் குடியரசு தின விழாவின் போது வழங்கப்படுகிறது. இவ்விருதானது தலா ரூ.20000, ரூ10000 மற்றும் ரூ.5000 க்கான காசோலை மற்றும் தகுதியுரை ஆகியவை தகுதியுடையோர்க்கு வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் (ஆயுதப்படை வீரர்கள், காவல், தீயணைப்புத் துறை மற்றும் அரசு பணியாளர்கள் ஆகியோர்கள் நீங்கலாக) சமுதாய நல்லிணக்க செயல் ஆற்றும் அரசுப் பணியாளர்கள் சமுதாய நல்லிணக்க செயல் ஆற்றும் அரசுப் பணியின் ஒரு பகுதியாக நிகழும் பட்சத்தில் இவ்விருதினைப் பெறத் தகுதியுடையவராவர்.


மேலும், இவ்விருதானது ஒரு சாதி, இனம், வகுப்பைச் சார்ந்தவர்கள் பிற சாதி, இன வகுப்பைச் சார்ந்தவர்களையோ அல்லது அவர்களது உடைமைகளையோ வகுப்புக் கலவரத்தின் போதோ அல்லது தொடரும் வன்முறையிலோ காப்பாற்றியது வெளிப்படையாகத் தெரிகையில் அவரது வீரம் மற்றும் மன வலிமையைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகிறது.

மேற்காணும் விருதிற்கான விண்ணப்பம் மற்றும் முக்கிய விவரங்;களை தமிழ்நாடு விளையாட்டு ஆணைய இணையதள முகவரியான http://awards.tn.gov.in மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், தகுதி வாய்ந்த விண்ணப்பங்கள் 15.12.2025 அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்கப் படவேண்டும். உரிய காலத்திற்குள் பெறப் படாத விண்ணப்பங்கள் கண்டிபாக நிராகரிக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி (தொலைபேசி எண்.0431 2420685) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன் தெரிவித்துள்ளார்.

## குன்னத்தூர் காவல் நிலையத்தில் குட்கா வழக்குகளில் 2025 வருடம் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 254 கிலோகிராம் குட்கா பொருட்களை நீதிமன்ற உத்தரவு படி தீயிலிட்டு அழிக்கப்பட்டது.



போதைப் பொருட்கள் இல்லா தமிழ்நாட்டை உருவாக்கும் பொருட்டு 09.12.2025 ஆம் தேதி இந்த வருடம் (2025) குன்னத்தூர் காவல் நிலையத்தில் குட்கா வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 254 கிலோ கிராம் குட்காவை உத்துக்குளி நீதிமன்றம். காவல் கண்காணிப்பாளர் கிரிஷ் யாதவ் உத்தரவு படி குன்னத்தூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.சுசீலா, குன்னத்தூர் டவுன் பஞ்சாயத்து செயல்அலுவலர் பாலசுப்பிரமணியன், ஊத்துக்குளி உணவு பாதுகாப்பு துறை அதிகாரி இளங்கோவன், குன்னத்தூர் வருவாய் ஆய்வாளர் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் 8 வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட குட்கா முழுவதும் குன்னத்தூர் அருகில் உள்ள காட்டு பகுதியில் வைத்து தீயிலிட்டு முறைப்படி அழிக்கப்பட்டது.

# சேலம் விமான நிலையத்தில் தடையில்லாத போக்குவரத்து.

சேலம் விமான நிலையத்தில்,இண்டிகோ விமான போக்குவரத்து சேவை தடையின்றி நடந்து வருகிறது.

பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள், உதவிகள் செய்து கொடுப்பதாக, விமான நிலைய இயக்குனர் நவ்ஷாத் தெரிவித்தார். நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது: சேலம் விமான நிலையத்தில் இண்டிகோ விமான போக்குவரத்து, தடையின்றி நேரம் தவறாமல் நடந்து வருகிறது. நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் தடைகள் இருந்தாலும், சேலத்தில் தடையின்றி விமான போக்குவரத்து நடந்து வருகிறது. பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள், தேவைகள், உதவிகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகிறது.

சேலம் விமான நிலையத்தில், இரவில் விமானத்தை இயக்க, விரிவாக்க பணிகள் செய்ய வேண்டும். முதற்கட்டமாக கடந்த மாதம் 28ம்தேதி 206 ஏக்கர் நிலத்தை கையாகப்படுத்த, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக இழப்பீட்டு தொகை வழங்க சுமார் ரூ.365 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சேலம் விமான நிலையத்தில் இருந்து கூடுதல் விமானம் இயக்க, ஒரு சில நிறுவனங்களிடம் இருந்து அனுமதி கோரப்பட்டுள்ளது. சேலம் விமான நிலையத்தில் இருந்து காலையில் சென்னை உள்ளிட்ட பல்வேறு பெரு நகரங்களுக்கு, ஜனவரியில் புதிய கூடுதல் விமானங்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போது, விமான நிலைய துணை இயக்குனர் ரமேஷ், எஸ்ஐ முருகேசன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சேலத்தில் கோயிலுக்காக இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 'யுடியூப் சேனல்'தொடக்கம்.

சங்ககிரி அருகே உள்ள ஒருக்காமலை கோயில் பெயரில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 'யுடியூப் சேனல்' தொடங்கப்பட்டுள்ளது.

சங்ககிரி அருகே ஒருக்காமலை மீது குன்றில் உள்ள குகையில் பெருமாளின் திருநாமமான சங்கு, சக்கரம் உள்ளன. இதை பக்தர்கள் நீண்ட காலமாக வழிபட்டு வருகின்றனர். இம்மலைக்கு சங்ககிரியிலிருந்து கொங்கணாபுரம் செல்லும் வழியாகவும், சேலம் செல்லும் வழியில் உள்ள ஆவரங்கம்பாளையம் வழியாகவும் என இரண்டு வழிகளில் பக்தர்கள் சென்றுவருகின்றனர். இரண்டு வழிகளிலும் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள அறநிலையத் துறை கோயில்களில் அதிக காணிக்கைகள் வசூலாகும் கோயில்களில் ஒன்றாக இது திகழ்ந்து வருகிறது. இந்த பெருமாள் கோயில்களில் புரட்டாசி மாதம், பிரதி சனிக்கிழமை, அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாள்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. இதில் அதிக அளவிலான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமியை வழிபடுகின்றனர்.

இதையடுத்து, இந்துசமயஅறநிலையத் துறையின் சார்பில் டிச. 6ஆம் தேதி 'யுடியூப் சேனலை' தொடங்கியுள்ளனர். இதில், டிச. 10ஆம் தேதி உண்டியலில் பக்தர்கள் செலுத்திய காணிக்கைகளை எண்ணும் பணி நேரடி ஒளிப்பரப்பு செய்யப்பட்டது.

இதேபோல, சங்ககிரி நகர் பகுதியில் இந்துசமய அறநிலையத் துறையின்கீழ் செயல்படும் அருள்மிகு சௌந்தரநாயகி உடனமர் சோமேஸ்வரர் கோயில், வி.என்.பாளையத்தில் உள்ள அருள்மிகு வஸந்தவல்லி உடனமர் வஸந்தவல்லபராஜ பெருமாள், தபால் ஆஞ்சனேயர் கோயிலில் நடைபெறும் பூஜைகளை பக்தர்கள் காண 'யுடியூப் சேனலை' தொடங்கவேண்டுமென பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் வட்டார மருத்துவ அலுவலர்கள், மற்றும் மருத்துவ அலுவலர்களுடனான மாதாந்திர ஆய்வு கூட்டம் நடைபெற்றது.இதில் அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரி முதல்வர் ஜெ.ரேவதி, மாவட்ட சுகாதார அலுவலர் பிரியாராஜ் (திருவள்ளூர்),ஜெ.பிரபாகரன் (பூவிருந்தவல்லி) துணை இயக்குநர் (குடும்ப நலம்) சேகர், மருத்துவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செய்யாறில் த.வெ.க.,வின் புதிய அலுவலகத்தை மாவட்ட செயலாளர் உதயகுமார் திறந்து வைத்தார்




செய்யாறு, டிச. 12

செய்யாறு நகரில் த.வெ.க.,வின் மத்திய ஒன்றியத்தில் புதிய அலுவலகத்தை, திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார் நேற்று குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்டம், த.வெ.க.,வின் கிழக்கு மாவட்ட செயலாளராக உதயகுமார் இருந்து வருகிறார். இவரது பொறுப்பில் செய்யாறு சட்டசபை தொகுதியும் வந்தவாசி சட்டசபை தொகுதியும் இருந்து வருகிறது. மாவட்ட செயலாளர் அலுவலகம் செய்யாறில் உள்ள புறவழி சாலையில் இயங்கி வருகிறது இந்த அலுவலகத்தில் தான் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் தங்களது கட்சி பணிகளை செய்து வருகின்றனர். இந்நிலையில் செய்யாறு மத்திய ஒன்றியத்திற்கு புதிய செயலாளராக புவனேஸ்வரி கடத்த சில நாட்களுக்கு முன்பு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது தலைமையில் செய்யார் மத்திய ஒன்றியத்தில் 500க்கும் மேற்பட்ட பெண் நிர்வாகிகள், தொண்டர்கள் இருந்து வருகின்றனர். பெண் நிர்வாகிகளும் செய்யாறில் தங்களது கட்சியை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் புதிய அலுவலகத்தை உடனடியாக திறக்க வேண்டும் என, புவனேஸ்வரி ஆலோசித்து வந்தார். இதை அடுத்து செய்யாறு நகரத்துக்கு உட்பட்ட கீழ்புதுப்பாக்கம் கிராமத்தின் மெயின் ரோட்டில் த.வெ.க.,வின் புதிய அலுவலகம் திறப்பு விழா நேற்று நடந்தது. திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார், புதிய அலுவலகத்தை நேற்று குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, வட்ட பொறுப்பாளர்கள், தொண்டர்கள் என, 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். செய்யாறு மத்திய ஒன்றிய செயலாளர் புவனேஸ்வரி ஏற்பாட்டில் பல்வேறு மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 50 பெண்கள், மாவட்ட செயலாளர் உதயகுமார் முன்னிலையில் புதிய அலுவலக திறப்பு விழாவில் த.வெ.க.,வில் இணைந்தனர். இந்த புதிய தொண்டர்களுக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார் சால்வை அணிவித்து வரவேற்றார்.

# அரியலூர் இரண்டு வயது மகளை இடுப்பில் கட்டிக்கொண்டு ஏரியில் மூழ்கி உயிரிழந்த தாய்... ஏரிக்கரையில் அழுது துடித்த ஆறு வயது மகன்...



அரியலூர், டிச. 12–

இறப்புக்கு முன் குழந்தைகளுடன் கடைசி புகைப்படமாக செல்பி எடுத்து தனது கடைசி புகைப்படம் என்று பேஸ்புக்கில் பதிவிட்டு தனது இறப்புக்கு காரணம் என பதிவிட்ட நபரின் புகைப்படத்தை பதிவிட்ட பெண்

அரியலூர் மாவட்டம் ஓட்டகோவில் கிராமம் காலனி தெருவை சேர்ந்தவர் ரகுபதி(36). கொத்தனார் வேலை பார்த்து வரும் இவருக்கு பாண்டிலெட்சுமி (வயது 32) என்ற மனைவியும் லோகேஷ் (வயது 6) கமலேஷ் (வயது 2) ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர். ரகுபதி தனது மனைவி பாண்டிலெட்சுமியுடன் திருப்பூரில் தங்கி வேலை பார்த்து வருகிறார். பாக்கியலட்சுமி பியூட்டிஷியனாக வேலை பார்த்துள்ளார். இந்நிலையில் ரகுபதி கடந்தபத்துமாதங்களுக்கு முன்பு ஓட்ட கோவிலுக்கு வந்து கொத்தனார் வேலை பார்த்து வருகிறார். பாண்டிலட்சுமி திருப்பூரில் தங்கி தனது பியுட்டீசியன் பணியை தொடர்ந்து செய்துள்ளார். இந்நிலையில் கடந்த இரண்டு மாதங்களாக, பாண்டி லட்சுமிக்கு திருப்பூரில் ஒருவருடன் தகாத உறவில் ஈடுபட்டுள்ளதாக கணவர் ரகுபதிக்கும் மனைவி பாண்டி லெட்சுமிக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தனது மகன்கள் லோகேஷ் மற்றும் கமலேஷ் ஆகிய இருவரையும் அழைத்துக் கொண்டு திருப்பூரில் இருந்து பாக்யலட்சுமி, ஓட்டகோவிலுக்கு சென்றுள்ளார் செல்லும் வழியில் உள்ள அம்பலவார்கட்டளை கிராமத்தில் உள்ள ஏரிக்கரையில். பெரிய மகன் லோகேஷை கரையில் உட்கார வைத்து விட்டு, தனது இளைய மகன் கமலேஷை தனது துப்பட்டாவால் தனது இடுப்பில் கட்டிக்கொண்டு, ஏரியில் மூழ்கியுள்ளார்.

நீண்ட நேரம் ஏரிக்கரையில் லோகேஷ் தனியாக அழுது கொண்டிருப்பதை பார்த்த அம்பலவார்க் கட்டளை கிராமத்து மக்கள் விசாரித்த பொழுது, தனது தாய் தனது தம்பியுடன் ஏரியில் இறங்கி விட்டதாக கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த அம்பலவர் கட்டளை கிராமத்து மக்கள் ஏரியில் குதித்து உயிரிழந்த நிலையில் தாய் பாண்டிலெட்சுமி மற்றும் மகன் கமலேஷ் ஆகிய இருவரையும் மீட்டனர்.

மேலும் தரையில் அமர்ந்திருந்த மூத்த மகன் லோகேஷ் கையில், பாண்டிலட்சுமி செல் போன் இருந்துள்ளது. அதை எடுத்து பார்த்த பொழுது,

தனது இரு குழந்தைகளுடன் செல்பி எடுத்து, இதுதான் எனது கடைசி புகைப்படம் என்றும், தனது சாவுக்கு காரணம் இவர்தான் என்று திருப்பூரில் தான் பழகிய நபரின் படத்தையும் பதிவிட்டு, அதை பேஸ்புக்கில் ஏற்றி விட்டு பாண்டிலட்சுமி தனது மகனுடன் தற்கொலை செய்து கொண்டுள்ளது தெரிய வந்துள்ளது.

மேலும் உயிரிழந்த பாண்டிலெட்சுமி மற்றும் கமலேஷ் ஆகியோரின் வாயில் நுரை தள்ளி உள்ளதால், ஏரியில் மூழ்கி இறப்பதற்கு முன் விஷம் அருந்தி உள்ளனரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இது குறித்து அறிந்த விக்கிரமங்கலம் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பாண்டிலெட்சுமி மற்றும் அவரது மகன் கமலேஷ் உடலை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். உயிரிழந்த பாண்டி லட்சுமியின் கணவர் ரகுபதியிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இரண்டு வயது குழந்தையுடன் ஏரியில் முழுகி தாய் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது



திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் காமராஜர் நகரில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் முகாம் இல்லத்தில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், நேரில் சந்தித்து திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே பேட்டை, பாலாபுரம் கிராம ஊராட்சி தமிழ்நாடுதேசிய அளவில் சிறந்த கிராம ஊராட்சி 3 வது இடத்திற்கு பெற்ற விருதை காண்பித்து வாழ்த்து பெற்றார். இதில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரன்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை. ஜெயகுமார், ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் ராஜவேல்,உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கே.எஸ்.யுவராஜ், உதவி செயற்பொறியாளர்கள்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" பெற விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல், டிச. 12–

சமூக நீதிக்காக பாடுபடுபவர்களை சிறப்பு செய்வதற்காக "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" 1995 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது பெறுவோருக்கு ரூ.5,00,000/ (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) விருது தொகையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகிறது. இவ்விருதாளர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படுகிறார்.

2025 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" வழங்குவதற்கு உரிய விருதாளரை தேர்ந்தெடுக்க பரிந்துரைகள் வரவேற்கப்படுகிறது. எனவே, சமூக நீதிக்காக பாடுபட்டு பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதன் பொருட்டு எய்திய சாதனைகள் ஆகிய தகுதிகள் உடையவர்கள் தங்களது விண்ணப்பம், சுயவிவரம், முழு முகவரி, தொலைபேசி எண் மற்றும் சமூக நீதிக்காக பாடுபட்ட பணிகள் குறித்த விவரம் மற்றும் ஆவணங்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரகத்தில், தரைதளத்தில் இயங்கி வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். 2025 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதிற்கான விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 18.12.2025 என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், விவரங்களுக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை, அணுகி விவரங்களை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன். இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

## இபைலிங் முறையை கண்டித்து வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்..!




திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வழக்கறிஞர் சங்கத்தின் சார்பில் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நுழைவு வாயிலில் இபைலிங் முறையை கண்டித்து பெருந்திரள் மற்றும் பெருமுழக்கப் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்திற்கு வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் வி.ஜி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். மூத்த வழக்கறிஞர்கள் நவாப் ஜான் விஸ்வநாதன் மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இபைலிங் நடைமுறையில் உள்ள பொதுமக்களுக்கான பாதிப்புகள் குறித்து வழக்கறிஞர்கள் சா.இரா.மணி, சுரேஷ், ராமன், வைணவ வினோதினி மற்றும் பல்வேறு வழக்கறிஞர்கள் உரையாற்றினர். இந்த கூட்டத்தில் 60க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

## கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் தமுமுக சார்பில் புகார் மனு..!!!



கோவை டிசம்பர் 12

தமிழகத்தில் 175 பள்ளிவாசல்கள் இந்து கோவில்களை இடித்து தான் பள்ளிவாசல்கள், தேவலாங்கள் கட்டப்பட்டதாக குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் ஆர்எஸ்எஸ் கும்பல் பதிவிட்டிருக்கிறார்கள்

தமிழகத்தில் தற்போது அண்ணன் தம்பியாக அனைத்து மதத்தினரும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்க கூடிய இந்த நேரத்தில் கலவரம் செய்ய துடிக்கும் கையவர்களை கைது செய்யக்கோரியும்

இதை கண்டித்து தமுமுக சார்பில் தமிழக முழுவதும் மாநகர கமிஷனர் அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளனர்.

அந்த இணைய தளத்தை முடக்கி அதனை இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி கோவை மாநகர காவல் ஆணையர் ஏ.சரவண சுந்தர் அவர்களை சந்தித்து தமுமுக மாவட்ட தலைவர் சர்புதீன் மாவட்ட செயலாளர் முஜிபுர் ரஹ்மான், மமக மாவட்ட செயலாளர் இப்ராஹிம். மாவட்ட பொருளாளர் சிராஜுதீன் .மாவட்ட துணை செயலாளர்கள் குனிசை ஷாஜகான்.மு.ஆஷிக் அகமது. அசாருதீன் ஆகியோர் புகார் மனு வழங்கினார்கள்.

## மனிதர்களிடம் பல வேற்றுமைகள் இருந்தாலும் எல்லாவற்றிலும் அவரவரின் உரிமைகளை மதித்து நடப்பதை அனைவரும் உறுதி செய்வதே மனித உரிமைகள் தினத்தின் நோக்கம்

### கோவையில் நடைபெற்ற மனித உரிமைகள் தின விழாவில் கலந்து கொண்ட தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரஃபி பேச்சு!!

கோவைடிச:12

HROCS எனும் மனித உரிமை கழகம் நாடு முழுவதும் உள்ள 28 மாநிலங்களில் உள்ள ஏழை எளிய மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கவும், பொருளாதாரத்தில் பின்னடைந்த ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றனர்..

இந்நிலையில் உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, கோவை நூர்சேட் மகால் அரங்கில்,HROCS எனும் மனித உரிமை கழகத்தில் தம்மை ஈடுபடுத்தி செயல் பட்டு வரும் அனைத்து நிர்வாகிகளுக்கும் விருதுகள் வழங்கும் விழா மற்றும் சமூகத்தில் நலிவடைந்தவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது..



HROCS மனித உரிமை கழகத்தின் தலைவர் ஏ.எம்.முஸ்தபா பட்டாம்பி தலைமையில் நடைபெற்ற விழாவில், கோவை மாவட்ட தலைவர் டிஸ்கோ காஜா முன்னிலை வகித்து அனைவரையும் வரவேற்று பேசினார்..

விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரஃபி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்..

அப்போது பேசிய அவர், உலகில் உள்ள அனைத்து மக்களின் உரிமையை பாதுகாப்பதை வலியுறுத்தி மனித உரிமைகள் தினம் அனுசரிக்கப்படுவதாக தெரிவித்த அவர், அனைத்து தரப்பினருக்கும் வேற்றுமைகள் இன்றி சம உரிமை வழங்குவதே மனித உரிமைகளின் முக்கிய நோக்கம் என கூறினார். உணவு உண்ணுவது துவங்கி, கடவுளை பிரார்த்திப்பது என மக்களிடம் பல வேற்றுமைகள் இருந்தாலும் எல்லாவற்றிலும் அவரவரின் உரிமைகளை மதித்து நடப்பதை அனைவரும் உறுதி செய்வதே மனித உரிமைகளின் நோக்கம் என தெரிவித்தார்ஞ்

தொடர்ந்து நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஏழை எளிய குடும்பத்தினருக்கு அரிசி மளிகை பொருட்கள் புத்தாடைகள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப் பட்டன..

விழாவில் HROCS மனித உரிமை கழகத்தின் பல்வேறு மாநில,மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## எ.வ.வேலு, வி.எஸ்.பி. வழியில் நல உதவிகளை வழங்கி அசத்தும் ஏ.பி.என்.,

வேலூர், டிச. 12

துணை முதல்வரும் திமுக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலினின் 48ஆவது பிறந்த நாளையொட்டி, வேலூர் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டக் கழகச் செயலாளரும், அணைக் கட்டு எம்.எல்.ஏ.வுமான ஏ.பி.நந்தகுமாரின் முயற்சியால் பல்லாயிரக் கணக்கானோருக்கு நல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



திருவண்ணாமலையில் அமைச்சர் எ.வ.வேலு, கரூரில் முன்னாள் அமைச்சர் வி.எஸ். செந்தில்பாலாஜி போன்றோர் பொதுமக்களுக்கு நல உதவிகளை வழங்குவதைப் போல் வேலூர் மாவட்டத்திலும் ஏ.பி.நந்தகுமார் வழங்கத் தொடங்கியுள்ளார்.

பேர்ணாம்பட்டில் நகர திமுக இளைஞரணி அமைப்பாளர் விஷ்வா தலைமையில் நடைபெற்ற விழாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், குடியாத்தத்தில் கவுன்சிலர் அர்ச்சனா நவீன் தலைமையில் நடைபெற்ற விழாவில் 250 துப்புரவுப் பணியாளர்களுக்கு நல உதவிகள், அணைக்கட்டில் மாவட்ட சேர்மனும் ஒன்றியக் கழகச் செயலாளருமான மு.பாபு தலைமையில் நடைபெற்ற விழாவில், மூன்று ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நல உதவிகள் என தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், வேலூர் தெற்கு மாவட்ட திமுக மகளிரணி சார்பில் குடியாத்தம் பழைய பேருந்து நிலையத்தில் 8.12.2025இல் மாவட்ட திமுக மகளிரணி தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சி. ஜெயந்தி பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற விழாவில், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நல உதவிகள் வழங்கப்பட்டன.

குடியாத்தம் பழைய பஸ் நிலையத்தில் நடைபெற்ற அசத்தலான நிகழ்ச்சியில் வருகை தந்த ஏ.பி.நந்தகுமாரை வரவேற்கும் விதமாக, 'ரேம் வாக்' அமைக்கப் பட்டிருந்தது. விழாவுக்கு வருகை தந்த அவரை நூற்றுக்கணக்கான பெண்கள் மலர் தூவி வரவேற்றனர்.

கேரள செண்டை மேளக் கலைஞர்கள், வீர சாகச நிகழ்ச்சிகளை நடத்தும் இளைஞர்கள் பெண்கள், வாண வேடிக்கைகள் முழங்க நந்தகுமாருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. விழாவுக்கு வருகை தந்தவுடன் நந்தகுமாருக்கு பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர்,அவர் மேடையில் இருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன் ஆகியோரின் உருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

விழாவில் பங்கேற்ற நந்தகுமாருக்கு அவரது உருவப் படம் பொறித்த நான்கரை அடி ஓவியத்தை முன்னாள் எம்எல்ஏ ஜெயந்தி பத்மநாபன் நினைவுப் பரிசாக வழங்கினார். விழாவில் தலைமைக் கழக பேச்சாளர் த.பாரி பேசும்போது, "வேலூர் மாவட்ட திமுக மகளிரணி மாநாட்டைப் போன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகளிரணியினர் திரண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.

இதேபோல், தலைமைக் கழக பேச்சாளர் பெரிய கோட்டீஸ்வரன், கவிஞர் தூயவன் ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கிப் பேசினர்.

முன்னாள் எம்பி தி.அ.முகமது சகி பேசும்போது, மசூதியில் வழிபாட்டு ஒலி கேட்க சில நிமிடங்கள் பேச்சை நிறுத்திவிட்டு, பின்னர் தொடர்ந்தார்.

1048 மகளிருக்கு புடவைகள், 248 தூய்மைப் பணியாளர்களுக்கு சீருடை மற்றும் குடை, 248 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை, 148 மகளிர் கபாடி வீராங்கனைகளுக்கு சீருடை, 48 கழக முன்னோடிகளுக்கு ஐந்தாயிரம் ரூபாய் பொற்கிழியை நந்தகுமார் வழங்கினார்.

நல உதவிகள் குறிப்பிட்ட அளவுக்கு மேலும் மக்கள் வந்து கேட்க மாஜி எம்எல்ஏ ஜெயந்தி பத்மநாபனும் வழங்கினர்.

விழாவில் எம்எல்ஏ நந்தகுமார் பேசும்போது, குடியாத்தம் மாநகரில் இளந்தலைவர் உதயநிதிக்கு பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்ற கேள்வியுடன் எப்படி ஓட்டு கேட்க வேண்டும் என்று என்பதை விளக்கும் வகையில் நான்கரை ஆண்டு காலத்தில் மாண்புமிகு முதல்வர் – துணை முதல்வர் செய்த சாதனைகளைப் பட்டியலிட்டு, குடியாத்தம் தொகுதிக்கு மட்டும் என்னென்ன திட்டங்கள் எல்லாம் நடைமுறைக்கு வந்துள்ளது என்பதை அடுக்கடுக்காய் எடுத்துரைத்தார்.

மேலும், 2026இல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் மீசையை முறுக்கி விட்டு மக்களைத் தேடிச் சென்று ஓட்டு கேட்கும் உரிமை திமுக காரனுக்கு மட்டுமே உள்ளது என்று நெஞ்சை நிமிர்த்திப் பேசி பலத்த கை தட்டலுக்கு மத்தியில் இந்த பேச்சு போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா என வியக்கும் வகையில் உரையாற்றினார். எதிர்க்கட்சியினரையும் ஈர்க்கும் வகையில் தெள்ளத் தெளிவாய் எதார்த்த அரசியல் கருத்துகளைப் பரப்பி உடல் மொழியிலும் குரல் மொழியிலும் அபார திறமையை வெளிப்படுத்தி தொண்டர்களின் மனதை அள்ளிச் சென்றார்.

நகர்மன்றத் தலைவர் எஸ். சௌந்தராஜன் . பேரணாம்பட்டு கிழக்கு ஒன்றியச் செயலாளர் கே. ஜனார்த்தனன் , பேர்ணாம்பட்டு நகரச் செயலாளர் ஆலியார் ஜுபர் அஹமத், குடியாத்தம் ஒன்றியச் செயலாளர் கல்லூர் கே ரவி, பேர்ணாம்பட்டு மேற்கு செயலாளர் டி .டேவிட், பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியச் செயலாளர் எம். டி. சீனிவாசன் , தலைமை செயற்குழு உறுப்பினர் டி. விஜயகுமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கோ.வாசுகி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எம். மஞ்சுளா, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் எஸ். உத்தரகுமாரி, மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் கோ. மகேஸ்வரி, மாவட்ட மகளிர் அணி தொண்டர் அணி தலைவர் வே. சரோஜா, துணை அமைப்பாளர் ஜெ. புனிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேலூர் தெற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் .தி.அ. முகமது சகி, எம்எல்ஏ வி. அமுலு விஜயன், ஒன்றியக் குழுத் தலைவர் என். இ. சத்யானந்தம், மாவட்ட துணை செயலாளர்கள்

ஜி எஸ். அரசு, எம்.பிரதாப்குமார், பேர்ணாம்பட்டு ஒன்றியக் குழுத் தலைவர் சித்ரா ஜனார்த்தனன், பேர்ணாம்பட்டு நகர் மன்றத் தலைவர் பிரேமா வெற்றிவேல், மாதனூர் ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் டி சாந்தி சீனிவாசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் த. புவியரசி, கே.கண்ணன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் வக்கீல் பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இறுதியில் குடியாத்தம். நகர திமுக மகளிர் அணி அமைப்பாளர் ஆர். பிரியா நன்றி கூறினார்.

## கொலையா? இயற்கை மரணமா ? தந்தையின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக அண்ணன் , அக்கா ஆகிய இருவர் மீது தம்பி புகார்:

திருச்சி, டிச. 12–

திருச்சி மாவட்டம் , துவரங்குறிச்சி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கருமலை , சுரைக்காய் பட்டியை சேர்ந்த சின்ன காளை மகன் கருப்பையா (80), கிணிளி ஸிஜிஞ்ரி உதவி கல்வி அதிகாரியாக பணிபுரிந்து வந்த நிலையில் வயது ம மூப்பால் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்த நிலையில் மகன் வடிவேலு வீட்டில் இருந்து வந்துள்ளார் . இளைய மகன் விஜயகுமார் தனது தந்தையின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல பலமுறை அண்ணன் வீட்டிற்கு சென்று மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அழைத்துச் செல்ல பலமுறை முயன்ற போது தனது அண்ணன் வடிவேலு மற்றும் அக்கா அமுதா ஆகியோர் அழைத்துச் செல்ல எதிர்ப்பு தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது , இந்நிலையில் இன்று திடீரென தந்தை இறந்து விட்டதாகவும் மகன் விஜயகுமாருக்கு தகவல் கிடைத்துள்ளது ,தனது தந்தை இறப்பதற்கு முன்னதாக தன்னிடம் 2 கோடி ரூபாய் பணம் வைத்து இருப்பதாக கூறியுள்ளார் ,அதன் அடிப்படையில் தனது தந்தையின் பணத்திற்காக தனது தந்தையை சிகிச்சை பார்க்க விடாமல் தடுத்து விட்டதாகவும் எனது தந்தையின் இறப்பில் கொலை செய்யப்பட்டுள்ளாரா? இல்லை இயற்கை மரணமா ? என துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதன் பெயரில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் விசாரணை செய்து இறந்த கருப்பையாவின் உடலை கைப்பற்றி மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் இந்திய.கம்யூ தலைவர்கள் சந்திப்பு.!

சென்னை: சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் இந்திய கம்யூ. மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், முத்தரசன் உள்ளிட்டோர் சந்தித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா அழைப்பிதழ் வழங்குவதற்காக முதலமைச்சருடன் சந்தித்தனர்.

## ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழு சுற்றுப்பயணம்.. பல்வேறு திட்டப் பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்..




ஈரோடு. டிச. 12

ஈரோடு மாவட்டத்தில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்ட தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழுவினர் பல்வேறு திட்ட பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்நாடு சட்டப்பேரவை மதிப்பீட்டு குழு தலைவர் எஸ். காந்தி ராஜன் தலைமையில் தமிழ்நாடு சட்டப்பேரவை மதிப்பீட்டு குழுவினர் ஈரோடு மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தனர். அப்பொழுது மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தமிழ்நாடு சட்டப் பேரவை மதிப்பீட்டு குழுவினர் முதலில் ஈரோடு அருகே உள்ள சோலாரில் 74. 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பொது மக்களின் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட, சோலார் புதிய பேருந்து நிலையத்தை நேரில் பார்வைக்கு ஆய்வு செய்து பொதுமக்களுக் கான வசதிகள் குறித்து கேட்டறிந்தனர்.

மேலும் சோலார் புதிய பேருந்து நிலையத்தில் வுட் கட்டமைப்பு வசதிகள், பொதுமக்கள், ஓட்டுனர் மற்றும் நடத்துனர் ஆகியோருக்கு உரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதனையும் ஆய்வு செய்தனர், மேலும் அவர்களுக்கான தங்கும் வசதி குடிநீர் மற்றும் கழிவறைகள் வசதி செய்யப்பட்டு இருப்பதை ஆய்வு செய்தனர். தூய்மை பணியாளர்களின் பணிகள் குறித்தும், அவர்களின் வருகை பதிவேடுகளையும் மதிப்பீட்டு குழுவினர் ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து நெடுஞ் சாலை துறையின் சார்பில் 2.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஈரோடு முதல் தாராபுரம் சாலையில், 14/4 மற்றும் 15/8 கிலோமீட்டர் ஓடுதளம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்தனர்.

சாலையின் தரம் மற்றும் நீளம் அகலம், தடிமன் ஆகியவற்றை குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர். சம்பந்தப்பட்ட நெடுஞ் சாலைத்துறை அதிகாரிகளிடம் பணிகள் குறித்து விளக்கம் கேட்டனர்.

மேலும் சென்னிமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் மலைப்பாதை திட்டத்தின் கீழ் 6.70 கோடி மதிப்பீட்டில் 3.900 கிலோமீட்டர் மலைப்பாதை அமைக்கப்பட்டதை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்த நிலையில், அந்த மலைப்பாதை பணிகள் குறித்தும் குழுவினர் ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து பெருந்துறை கூட்டுறவு துறை சார்பில் செயல்படுத்தப்படும் கொப்பரை தேங்காய் ஏல மையம் மற்றும் பசுமை சமையல் எண்ணெய் ஆலையையும் குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

தொடர்ந்து பல்வேறு இடங்களில் ஆய்வு செய்த தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழுவினர், விவசாய பெருங்குடி மக்களையும் சந்தித்து உரையாடி குறைகளை கேட்டறிந்தனர்.

முன்னதாக 35 பயனாளிகளுக்கு 74.74 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நல திட்ட உதவிகள் மதிப்பீட்டு குழுவினரால் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டப் பேரவை மதிப்பீட்டு குழு தலைவர், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். காந்தி ராஜன் தலைமையில், மதிப்பீட்டு குழு உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இராம. கருமாணிக்கம் ( திருவாடனை தொகுதி திருவாடனை ) எஸ் பி வெங்கடேசன் ( தர்மபுரி தொகுதி) மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி, மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயன், நெடுஞ் சாலைத்துறை கோட்ட பொறியாளர் ரமேஷ் கண்ணா, சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் சீனிவாசன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் காந்தி ராஜன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் ஆய்வில் பங்கேற்றனர்.

தொடர்ந்து மதிப்பீட்டு குழுவினர் ஈரோடு ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் ஆய்வு கூட்டம் நடத்தினர்.




தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவர்/ வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் ஈரோடு மாவட்டம், சோலார் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தினை ஆய்வு மேற்கொண்டு தூய்மைப்பணியாளர்களிடம கலந்துரையாடி கோரிக்கையினை கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களான சட்டமன்ற உறுப்பினர்கள் இராம. கருமாணிக்கம், எஸ்.பி.வெங்கடேஷ்வரன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, சட்டமன்ற முதன்மைச் செயலாளர் முனைவர் சீனிவாசன், துணைச் செயலாளர் பாலகிருஷ்ணன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின் உட்பட பலர் உடனிருந்தார்கள்.

# திருவள்ளூரில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்ப்பு பணிகள்



திருவள்ளூர் டிச 12 : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்பு கிடங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026க்கான ஆயத்த பணிகளில் ஒன்றான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்ப்பு பணிகள் திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான மு.பிரதாப் தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட முகவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அப்போது மாவட்ட தேர்தல் அலுவலர் கூறியதாவது :

தேர்தல் 2026 காண தயாரிப்பு பணிகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது முதலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடங்கி இன்றுடன் வழங்குவதற்கான கடைசி நாள். இன்று இப்பணிகள் முடிந்ததற்கு பிறகு மறுசீரமைத்தல் பணிகள் முடிவுற்ற பிறகு 16 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடன் சேர்ந்து வெளியிட போகிறோம். அதற்கு பிறகு பெயர் சேர்த்தல், நீக்கல் பணிகள் இரண்டு மாதம் நடைப்பெற்று முடிந்த பின்னர் பிப்ரவரி மாதத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

பொது தேர்தலுக்காக வாக்குபதிவு இயந்திரங்களை தயாரிக்கும் பணி அடுத்த பணி மிக முக்கியமான பணி ஆகும். அதற்கு முதல் நிலை சரிபார்ப்பு பணிகள் நடைபெறும். முதல் நிலை சரிபார்ப்பு கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு இப்பொழுது தான் இயந்திரங்கள் செயல்பாடு குறித்து பெல் பொறியாளர்கள் ஆய்வு செய்வார்கள். அடுத்த பொது தேர்தலுக்கு அந்த வாக்குப்பதிவு இயந்திரங்கள் தயார் நிலையில் இருக்கிறதா என்பதை உறுதிபடுத்தும் பணிகள் நடைபெறும். இப்பணியை திருவள்ளூர் மாவட்ட10 சட்டமன்ற தொகுதிகளிலும் சேர்த்து நடைபெறும்.

வாக்குப்பதிவு இயந்திரம் 8914 இயந்திரங்களும், கண்ட்ரோல் யூனிட் எனப்படும் வாக்கு பதிவு செய்யும் 6614 இயந்திரங்களும், வாக்காளர் சரிபார்க்குத் காகித தணிக்கை சோதனை (விவிபிஎடி) எனப்படும் இயந்திரம் 6273 மொத்தமாக 21,801 இயந்திரங்களை சரிபார்க்கும் பணி இன்று தொடங்கி இருக்கிறது. இது ஏறக்குறைய 2530 நாட்கள் நடைபெற உள்ளது. பெங்களூர் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் பொதுத்துறை நிறுவனத்திலிருந்து 13 பொறியாளர்கள் வந்திருக்கிறார்கள்.அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளால் நியமிக்கப்பட்ட 2 நபர்கள் இப்பணிகளை பார்வையிடுவார்கள். இப்பணியின் போது கைப்பேசி. எவ்வித மின்னனு பொருட்களும் எடுத்து வர அனுமதியில்லை. இப்பணி மிகவும் பாதுகாப்பாக நடைபெறும். இந்த பணிகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்படும். சரிபார்க்கப்பட்ட இயந்திரங்ளின் எண்ணிக்கை அன்று மாலை செயலியில் பதிவேற்றம் செய்யப்படும். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும் இயந்திரங்களின் கோளாறுகள் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கையாக சமர்பிக்கப்பட்டு புது இயந்திரங்கள் பெறப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 35,82,226 ஆகும். இதில் 3582032 படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதில் 194 படிவங்கள் மட்டும் விநியோகிக்கப்படவில்லை. பெரும்பான்மையான படிவங்கள் திரும்பவந்ததற்கான காரணங்கள் இறப்பு, வீடுகளை நிரந்தரமாக காலி செய்தல் இந்த இடங்களுக்கு வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் 3 முறை நேரில் சென்றும் தகவல்களை பதிவு செய்துள்ளனர். மேலும் இது தொடர்பாக தகவல்கள் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் போது வழங்கப்படும் என கூறினார். இதில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) டி.ஸ்ரீராம், பெல் நிறுவன பொறியாளர்கள். பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் ரயில்வே மேம்பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த பைக் மீது லாரி மோதி விபத்து : 70 வயது முதியவர் உயிரிழந்த பரிதாபம்

திருவள்ளூர் டிச 12 :

திருவள்ளூர் ரயில்வே மேம்பாலப் பகுதியில் இரு சக்கர வாகனம் மீது டிப்பர் லாரி மோதிய விபத்தில் அதிகத்தூர் முதியவர் உயிரிழந்தது குறித்து போலீசார் விசாரணை வருகின்றனர். கடம்பத்தூர் ஒன்றியம் அதிகத்தூர் இந்திரா நகர் பகுதியைச் சேர்ந்தவர் முத்துசாமி (70) எல்.ஐ.சி. ஏஜென்டாக பணிபுரிந்து வரும் இவர் தனது டி.வி.எஸ். ஸ்கூட்டி பெப் இரு சக்கர வாகனத்தில் திருவள்ளூர் நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அப்போது ரயில்வே மேம்பாலத்தில் வந்துகொண்டிருந்த போது பின்னால் வந்த டிப்பர் லாரி மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே முதியவர் முத்துசுவாமி பலியானார். தகவலறிந்த திருவள்ளூர் டவுன் போலீசார் உடலைக் கைப்பற்றி திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.


இதுகுறித்து இவரது மகன் விஜய் கொடுத்த புகாரின்படி திருவள்ளூர் நகர போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். விபத்தை ஏற்படுத்திய டிப்பர் லாரியை பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்தில் பலியான முதியவரின் உடலைப் பார்த்து உறவினர்கள் கதறி அழுத சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

## ஏரியில் பாய்ந்த கார்



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த செம்மேடு அருகே தேசிய நெடுஞ்சாலையில் மாருதி.டிசையர் கார் ஒன்று எதிரே வந்த இரு சக்கர வாகனத்தில் மீது மோதாமல் இருக்க பிரேக் பிடிக்கும்போது செம்மேடு ஏரியில் கார் விழுந்து விட்டது மேற்கண்ட விபத்தினால் யாருக்கும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் உயர் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய அதிநவீன அவசர சிகிச்சை பிரிவு மற்றும் மேம்பட்ட உயிர் கண்காணிப்பு அமைப்பு திறப்பு!!



கோவை டிச12

எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் ஆதரவுடன் கோவை மாநகர் சித்தாபுதூர் பகுதியில் இயங்கும் பல்நோக்கு சிறப்பு சிகிச்சை மருத்துவமனையான ‘ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவ மனை’ இன்று தனது மேம் படுத்தப்பட்ட அதிநவீன அவசர சிகிச்சை பிரிவின் திறப்பை அறிவித்தது.

இந்த புது பிரிவை, எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் ஆர்.சுந்தர், இணை நிர்வாக அறங்காவலர் நரேந்திரன், தலைமை நிர்வாக அதிகாரி சி.வி.ராம் குமார், தலைமை நிர்வாக அலுவலர் மகேஷ் குமார், ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் மருத் துவ கண்காணிப்பாளர் டாக்டர் எஸ்.அழகப்பன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இந்த புதிய அவசர சிகிச்சைப் பிரிவு சர்வதேச நாடுகளில் பின்பற்றப்படும் அவசர மருத்துவ அளவுகோல்களின்படி கட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் பக்கவாதம், மாரடைப்பு , மற்றும் பாலிட்ராமா எனும் ஒரே நபருக்கு உடலின் பல இடங்களில் ஏற்பட்ட ஆபத்தான பாதிப்புகள் ஆகியவற்றுக்கு என்.ஏ.பி.ஹெட்ச். ( மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வழங்குநர்களுக்கான தேசிய அங்கீகார வாரியம்) கொடுத்துள்ள வழி முறைகள் உடன் சர்வதேச தரத்துடன் ஒப்பிடக்கூடிய உயர் துல்லியமான சிகிச்சையை வழங்க முடியும்.

இந்த 24 மணிநேர சேவை என்பது 10க்கும் மேற்பட்ட அவசர மருத்துவர்கள் மற்றும் தீவிர மற்றும் அதிதீவிர சிகிச்சையில் பயிற்சி பெற்ற 40 அவசர செவிலியர்கள் உட்பட, ஒருங்கிணைந்த, பல்துறை அவசர சிகிச்சைக் குழுவால் இயக்கப்படுகிறது.

இத்துடன், ஸ்ரீ ராம கிருஷ்ணா மருத்துவமனையின் மேம்பட்ட லைஃப் சயின்ஸ் ஆம்புலன்ஸ் நெட்வொர்க் மூலம், மருத்துவமனைக்கு நோயாளி அழைத்துவரப் படும் போதே அவரின் பாதிப்பு நிலையின் தீவிரத்தன்மையை சீராக்க பிரத்தியேக மருத்துவ வசதிகள் மற்றும் கண்காணிப்பு அம்சங்கள் இடன்பெற்றுள்ளன.

இந்த புதுமையான அமைப்பு, அவசர சிகிச்சைப் பிரிவில் அமைந்துள்ள இம்மருத்துவ மனையின் அதிநவீன ஸ்மார்ட் கண்காணிப்பு மையம் மூலம், நோயாளிகளை நிகழ்நேர கண்காணிப்பில் வைத்திருக்கும்.

இந்த ஆம்புலன்ஸில் வென்டிலேட்டர் எனப்படும் செயற்கை சுவாசக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. உள்ளே, நோயாளின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப சிகிச்சைக்கான மூன்று அடுக்கு அமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நவீன மறு உயிரூட்டல் அறைகளில் சி.டி., எம்.ஆர்.ஐ., மற்றும் டிஜிட்டல் இமேஜிங்கிற்கான வசதிகள் ஆகியவை உள்ளன.

இது வேகமாக பாதிப்பை கண்டறியவும், சிகிச்சையில் தாமதங்களைத் தவிர்க்க உதவும்.

இதுபற்றி எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் ஆர்.சுந்தர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,“அவசர சிகிச்சை நேரங்களில் ஒவ்வொருநொடியும் மிகமிக முக்கியமானது.

இந்த நேரத்தில் உலக தரமான சிகிச்சையை வழங்கவேண்டியதன் முக்கியத்துவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவ மனையில் நாங்கள் உணர்ந்து உள்ளோம், அதை இது போன்ற தருணங்களில் வழங்கு வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியுண்ட உள்ளோம். இந்த புது உயர் தொழில்நுட்ப வசதிகள் கொண்ட அதிநவீன அவசர சிகிச்சை பிரிவு நோயாளிகளுக்கு தேவைப்படும் நம்பகத்தன்மை கொண்ட, உலக தர சிகிச்சை வழங்கும்,”என கூறினார்.

## மூன்றாண்டுகள் பணி முடித்த ஊரக தூய்மை பணியாளர்களை பணி நிரந்தம் செய்ய ஏஐடியூசி கோரிக்கை




மணப்பாறை டிச 12

திருச்சி மிளகுபாறையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியூசி சங்கத்தின் மாவட்ட குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியூசி சங்கத்தின் மாவட்ட தலைவர் இந்திரஜித் தலைமை வகித்தார் மாவட்ட துணை செயலாளர் ஜனசக்தி உசேன் , அருள் ஆரோக்கியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் நடைபெற்ற. வேலை கூறித்து பேசினார்

ஜனவரி மாதம் தர்மபுரியில் நடைபெறும் உள்ளாட்சி பணியாளர்கள் சம்மேளன மாநாட்டு பேரணியில் திருச்சி மாவட்டத்தின் சார்பில் அனைத்து தொழிலாளர்களும் பங்கேற்பது என்றும் பிரதிநிதிகள் ஏழு பேர் பங்கேற்பது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

தூய்மை பணியாளர்களுக்கு கொரானா காலத்தில் பணிபுரிந்தவர்களுக்கு ரூபாய் 15000 சிறப்பு ஊக்கத்தொகை வழங்குவோம் என்ற அரசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் .

ஊரக பகுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் தூய்மை காவலர்கள் பம்ப் ஆபரேட்டர்கள் வட்டார ஊக்குனர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி தொழிலாளர்களுக்கு அரசாணை எண் 62 ன்படி ஊதியம் வழங்க வேண்டும். மூன்றாண்டுகள் பணி முடித்த ஊரக பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த கூட்டத்தில் மணப்பாறை லால்குடி துறையூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421